

**Long-Term Care Home Update** | *Community Newsletter* | Lakeridge Health

**2022 ஜனவரி**

## ஜனவரியில் நடைபெற்ற நிர்மாணப் பணிகள்

எங்கள் வாசகர்களுக்கும் ஒட்டுமொத்த டர்ஹாம் பிராந்தியத்துக்கும் இனிய 2022 ஆம் வருட புத்தாண்டு வாழ்த்துக்கள்! இந்த ஆண்டு Ajax Pickering மருத்துவமனைக்கு அடுத்து தற்போது நிர்மாணிக்கப்பட்டு வரும் புதிய நீண்டகாலப் பராமரிப்பு இல்லத்துக்கு உற்சாகமூட்டும் மைல்கற்களைக் கொண்ட ஆண்டாக அமையும். இந்த முக்கிய நிகழ்வுகளை எங்கள் சமூகத்துடன் பகிர்ந்து கொள்வதற்கு எதிர்பார்க்கிறோம். முதலில் கடந்த மாத எட்டப்பட்ட வளர்ச்சியுடன் தொடங்குகிறோம்.

இல்லத்துக்கு வெளியே நிர்மாணத் தளத்தைச் சுற்றிலுமிருந்த வேலி நீக்கப்பட்டது. கிளெமெண்ட்ஸ் சாலையில் முடிவடையும் ஒழுங்கையும் அகற்றப்பட்டது. எனினும் புதிய வாகனத் தரிப்பிடப் பணி தொடர்வதால் ஹார்வுட் அவென்யூவில் உள்ள ஒழுங்கையின் ஒரு பகுதி அகற்றப்படவில்லை. அடுத்த சில வாரங்களில், வெளிப்புறச் செயற்பாடுகளின் பிரதான கவனம் வாகனத் தரிப்பிடத்தில் செலுத்தப்படும்.கட்டிடப் பணிக்குத் தேவையான கிரேன் இந்தமாதம் நிறுவப்பட்டது. முன் வார்ப்புப் பொருட்கள் வரவிருப்பதால் தளத்திலும் தளத்துக்கு வெளியிலும் கூடுதல் டிரக்குகளை எதிர்பார்க்கிறோம்.

இது நிறைவடைந்ததும், நீண்டகாலப் பராமரிப்புக்கும் மருத்துவமனை நோயாளிகளுக்கும், அதேபோல குடியிருப்போர், வருகைதருவோர், குழு உறுப்பினர்கள், குடும்ப உறுப்பினர்களுக்கென 500 வாகன நிறுத்துமிடங்கள் நமக்குக் கிடைக்கும்.

இல்லத்துக்கு உள்ளே, இல்லத்தின் முற்றம் எங்கும் கம்பிவேலி போடப்பட்டுள்ளது. இறுதிக்கட்ட வேலைகள் விரைவாக நடைபெற்று வருகின்றன. நிர்மாணப் பணி நிறைவடையும் நிலையில் இருப்பதால், இல்லத்தின் அனைத்துப் பகுதிகளையும் Lakeridge Health மற்றும் PCL Construction குழு ஆகிய இரண்டும் - விளக்குகள் பொருத்துதல் முதல் கதவு கீல்கல், தரைகள் வரை ஏதேனும் குறைபாடுகள் உள்ளனவா என்று சோதித்து நிவர்த்திப்பதற்காக - உன்னிப்பாக மதிப்பாய்வு செய்து வருகின்றன. இது கட்டிடம் சுத்தமாகவும், வேலைகள் முடிக்கப்பட்டும் Lakeridge Health குழுவினால் கையகப்படுத்தத் தயாராக இருப்பதை உறுதிசெய்யும்.

இந்த இறுதி நிர்மாணத் தறுவாயில், தளத்தை சுத்தம் செய்ய வேண்டியிருப்பதால் சற்று ஒலித் தொந்தரவுகள் இருக்கும். நிர்மாணத்துக்கு அருகில் வசிக்கும் ஒவ்வொருவருக்கும் அவர்களது பொறுமைக்கும் புரிதலுக்கும் தொடர்ந்து நன்றி சொல்கிறோம்.




*புதிய இல்லத்தின் முன்புற நுழைவாயில் சுற்றிலும் நடைபாதை, வாகனத் தரிப்பிடங்களுடன் (ஜனவரி 3, 2022)*

## கணிசமான செயலாற்றுகையை எதிர்பார்க்கிறோம்

நிர்மாணப் பணி தொடங்கிய 12 மாதங்களிலேயே Lakeridge Heathல் உள்ள நீண்டகாலப் பராமரிப்பு இல்லம் கணிசமான செயலாற்றுகையை நோக்கி நகர்ந்துள்ளது. ஒரு மிகப்பெரிய சாதனையாக, இந்தக் குறிப்பிடத்தக்க செயலாற்றுகை அனைத்து முக்கிய நிர்மாணப் பணிகளும் நிறைவுற்றதையும், இல்லம் Lakeridge Healthக்கு கையளிக்கத் தயாராக இருப்பதையும் காட்டுகிறது.

இதைத் தொடர்ந்து, Lakeridge Health குழு எதிர்வரும் மாதங்களில் ஸ்டேட் ஒஃப் ஆர்ட் ஹோம் தொழில்நுட்பத்துடன் இடம் மாறத் தயாராக இருப்பதை உறுதிசெய்யும். இல்லத்தை அதன் 320 எதிர்கால வசிப்போர்களுக்கு வசதியான இடமாக உருவாக்குவதற்கு இதில் இணையத் தொடர்பு மற்றும் உபகரணங்களை நிறுவுதல், சித்திரவேலை, பிற கடைசிகட்ட மெருகூட்டல்களைச் செய்வதும் அடங்கும். நீண்டகாலப் பராமரிப்பு இல்லத்தில் முக்கிய நிர்மாணப் பணிகள் நிறைவை எட்டியிருந்தாலும், ஹெலிபேட், வாகனத் தரிப்பிடத்தில் தனிப்பட்ட கட்டுமானச் செயற்திட்டங்கள் தொடரும்.

உரிய நேரத்துக்கு இந்த இலக்கை எட்டுவது என்பது திட்டமிடுவதிலும் நிர்மாணப் பணியிலும் ஈடுபட்டுள்ள ஒவ்வொருவருக்கும் மிகப்பெரிய வெற்றி தான். இதைக் கொண்டாடுவதற்காக, Lakeridge Health எதிர்வரும் வாரங்களில் அதன் பங்காளர்களான PCL Construction, Infrastructure Ontario, Parkin and G architects மற்றும் மாகாண அரசாங்கத்துடன் இந்த மைல்கல்லை அடையாளமிடும். இந்த மைல்கல்லை சாத்தியமாக்கிய பங்குடமையையும் ஆச்சரியத்தக்க வளர்ச்சியையும் முன்னோட்டம் காண கீழேயுள்ள காணொளியைப் பாருங்கள்!




## தொடர்பில் இருங்கள்

இந்த சமுதாயச் செய்திமடல் வாயிலாகவும் எங்கள் இணையதளம் lh.ca மூலமாகவும் எங்கள் வளர்ச்சியை உங்களுக்குத் தொடர்ந்து தெரிவித்தபடி இருப்போம்.

உங்களுக்கு கேள்விகள் இருந்தால் அல்லது மேலும் தகவல்களைப் பெற, எந்த நேரத்திலும் 905-576-8711 ext. 34167 என்ற இலக்கத்துக்கு அழையுங்கள் அல்லது AjaxLTC@lh.ca க்கு மின்னஞ்சல் அனுப்புங்கள். எங்களை டுவிட்டரிலும் முகநூலிலும் நீங்கள் பின்தொடரலாம்.

## பனிப்புயலின்போது ஒன்றிணைவோம்

ஜனவரி 17ல் இதுவரையில்லாதபடி 50 சென்டிமீட்டர் அளவு பனிப்பொழிவை Ajax கண்டது. நீண்டகாலப் பராமரிப்பு நிர்மாணத் தளத்தைச் சேர்ந்த 20 பக்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் தன்னார்வத்துடன் தங்கள் நேரத்தை பனியை வாரித் தள்ளுவதிலும் Ajax Pickering மருத்துவமனையின் வாகன நிறுத்துமிடங்களில் பனியை அகற்றுவதிலும் செலவிட்டனர். அவர்களது அளப்பரிய முயற்சிகளுக்கு நன்றி. மருத்துவமனைத் தொழிலாளர்கள் தங்களது அத்தியாவசிய முதல்நிலைப் பராமரிப்பைத் தொடரவும், நோயாளிகள் மருத்துவமனையை பாதுகாப்பாக அணுகவும் செய்யலாம்.



*ஒரு PCL குழு உறுப்பினர் மருத்துவர்களின் வாகனத் தரிப்பிடத்தில் பனியை அகற்றுகிறார்*

## முக்கிய நிர்மாணப் பதங்களுக்கான பொருள்விளக்கம்

**கணிசமான செயலாற்றுகை** என்பது முக்கிய நிர்மாணம் நிறைவுற்றதைக் குறிக்கும் ஒரு நிர்மாண மைல்கல் ஆகும். கணிசமான செயலாற்றுகைச் சான்றிதழ் என்பது செயற்திட்டம் அல்லது செயற்திட்டப் பகுதி பயன்பாட்டு நோக்கத்துக்குப் பொருந்துவதையும் உரிமையாளர் இடத்தைப் பொறுப்பேற் பயன்படுத்தத் தயார் என்பதைக் குறிக்கும்.

**பற்றாக்குறை மதிப்பீடுகள்** கணிசமான செயலாற்றுகைக முன்பாக இடம்பெறும். முழுமையான மதிப்பீடு செய்யப்பட்டு ஏதேனும் ஒப்பனை அல்லது தரப் பிரச்சினைகளைக் கண்டறிய நடத்தப்படும். பற்றாக்குறை என்பதில் வர்ணப்பூச்சில், தரைப்பூச்சில், கூரை ஓடுகளில், விளக்குகள் எரிவதில், சுவிட்சுகள் போன்றவற்றில் கீறல்களும் அடங்கும்.